| | |
|---|---|
| ***ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ( அய்யதஹுலல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் ) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*** | ***நாள் :22.02.08*** |

وَلَا تَزِرُ وَازِرَةٌ وِّزْرَ اُخْرٰى ؕ وَاِنْ تَدْعُ مُثْقَلَةٌ اِلٰى حِمْلِهَا لَا يُحْمَلْ مِنْهُ شَيْءٌ وَّلَوْ كَانَ ذَا قُرْبٰى ؕ
اِنَّمَا تُنْذِرُ الَّذِيْنَ يَخْشَوْنَ رَبَّهُمْ بِالْغَيْبِ وَ اَقَامُوا الصَّلٰوةَ ؕ وَمَنْ تَزَكّٰى فَاِنَّمَا يَتَزَكّٰى لِنَفْسِهٖ ؕ
وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ ﴿١٩﴾

***பொருள்: சுமை சுமைக்கும் ஒருவன் மற்றவனின் சுமையை சுமக்கமாட்டான். கனமான சுமை சுமத்தப்பட்ட (ஓர் உயிரானது) தன் சுமையை சுமக்க எவரையாவது அழைத்தால், அவர் நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரியே. அதில் சிறிதும் (அவரால்) சுமக்கப்படமாட்டாது. மறைவாகத் தம் இறைவனுக்கு அஞ்சி, தொழுகையை நிலைநாட்டுவோருக்கு மட்டுமே உம்மால் எச்சரிக்கை செய்ய முடியும். தூய்மையினை அடைபவர் தமக்காகவே தூய்மையினை அடைகிறார். மேலும் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது. (35:19).***

இன்றைய குத்பாவிலும் தொழுகை பற்றிய கருத்தே தொடர்கின்றது. தொழுகை இல்லாமல் மார்க்கத்தைப் பற்றி நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத அளவில் தொழுகை ஒரு முக்கிய கட்டளையாக இருக்கின்றது. திருக்குர்ஆனில் இதன் முக்கியத்துவம் பற்றி மிகவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் ஆரம்பத்திலேயே சூரா பக்கராவில் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வது பற்றி கூறிய பிறகு இரண்டாவது முக்கிய கட்டளையாக தொழுகையை நிலைநாட்டுவது பற்றி கூறப்பட்டிருக்கின்றது. சூரா ஃபாத்திஹாவில் **இய்யாக்க நஃபுது** பற்றி கூறி இறைவனை வணங்குவதற்காக இறைவனிடமே அல்லாஹ்வே! உன்னை நாங்கள் எப்போதும் வணங்கிக் கொண்டிருக்க உதவி செய்வாயாக என்று ஒரு நம்பிக்கையாளர் துஆ செய்யும்படி கூறப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் மனிதன் தனது படைப்பின் நோக்கத்தை நிறைவு செய்ய முடியும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

தொழுகை மார்க்கத்தின் தூணாகும். எனவே, கட்டிடம் தூண் மூலமாகத் தான் வலுவடையும். எனவே, எந்த தொழுகைகள் என்னும் தூண்களில் நமது மார்க்கம் நிற்கின்றதோ அந்த தொழுகைகளை பாதுகாப்பது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாகும். அவ்வாறில்லையென்றால் மார்க்க கட்டிடத்திற்கு அதனால் இழப்பு ஏற்படும். அது சிதைந்து விடும். **U.K.** ஜமாஅத்தின் தர்பிய்யத் செயலரும், அமெரிக்காவிலுள்ள லஜ்னா தலைவியும் தந்த அறிக்கைகளைப் பார்த்த பிறகு இவ்விஷயத்தில் கவலையளிக்கத்தக்க வகையில் ஜமாஅத் நிலைமை இருப்பது எனக்கு தெரிய வந்தது. **U.K.** ஜமாஅத்தையும் அமெரிக்கா ஜமாஅத்தையும் நான் குறிப்பிட்டுக் கூறியதால் மற்ற இடங்களில் இவ்விஷயத்தில் நாம் மிக உயர்வான தரத்தை அடைந்து விட்டதாக எவரும் கருத வேண்டாம். நாம் அடைய வேண்டிய அந்த உயர்வான தரம் அல்லது நாம் எதிர்பார்க்கும் அந்த உயர்வான திருப்தி அளிக்கக்கூடிய நிலை எந்த அறிக்கைகளிலும் எனக்கு தென்படவில்லை. எனவே, இவ்விஷயத்தில் அதிகம் முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதியும் 100 சதவீதம் தொழுகையை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்பவராக இருக்க வேண்டும். எனவே, இன்றும் நான் தொழுகை பற்றியே ஜமாஅத்திற்கு கவனமூட்டுவதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்று கருதினேன்.

கிலாஃபத்தின் நூறு ஆண்டு நிறைவடைவதையொட்டி அஹ்மதிகளாகிய நாம் மகிழ்ச்சி அடைகின்றபோது இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக நன்றியின் உணர்வுகளால் நமது உள்ளம் நிரம்பியிருக்கும்போது மார்க்கத்தின் முக்கிய கட்டளையான தொழுகையின் பக்கம் குறிப்பாக நமது கவனம் இருக்க வேண்டும்.

தொழுகையை நிலைநாட்டுவதன் பக்கம் கவனம் செலுத்துகின்ற நம்பிக்கையாளர்களுடன்தான் கிலாஃபத் பற்றிய வாக்குறுதி இருப்பதால் உண்மையிலேயே கிலாஃபத் என்ற அல்லாஹ்வின் அருட்கொடைக்கு நன்றி செலுத்துபவராக நாம் ஆகவேண்டுமென்றால், அந்த கிலாஃபத் அமைப்பிலிருந்து அருளைப் பெறவேண்டுமென்றால் தமது தொழுகைகளை பாதுகாப்பதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டியது ஒவ்வொரு அஹ்மதிக்கும் மிகவும் அவசியமானதாகும். நாம் நமது தொழுகைகளை பாதுகாத்து வருகின்றோமா என்று ஒவ்வொரு அஹ்மதியும் தன்னை ஆய்வு செய்து பார்க்கும்படி நான் மீண்டும் கூறுகின்றேன். அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் எந்த உயர்வான தரத்தில் நமது தொழுகைகள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்களோ அந்த உயர்வான தரத்தை நாம் பெற்று விட்டோமா? என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

எனக்கு எதிரில் உமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக நீர் எவரை நிறுத்தினாலும் அவரால் உமது தேவைகளை நிறைவு செய்ய முடியாது என்று அல்லாஹ் கூறுகின்றான். நான் தற்போது ஓதிய திருக்குர்ஆன் வசனத்திற்கு முன்புள்ள வசனங்களில் அல்லாஹ் தனக்கு இணைவைப்பவர்களைப் பார்த்து நீங்கள் வணங்குகின்ற பொய்த்தெய்வங்களால் நீங்கள் கூறுவதைக் கேட்கவும் முடியாது. உங்களது தேவைகளை நிறைவேற்றவும் முடியாது என்று அல்லாஹ் கூறுகின்றான். மாறாக, அந்த பொய்த்தெய்வங்கள் கியாமத் நாளில் நீங்கள் இணையாக்கியதை மறுத்து விடுவர். மேலும், நீங்கள் கூறியது எதுவும் எங்களுக்கு தெரியாது என்று கூறிவிடுவார்கள் என அல்லாஹ் கூறுகின்றான். எனவே, எல்லாவற்றிற்கும் எஜமானனாக இருப்பது அல்லாஹ் ஒருவனேயாவான். அடியானுக்கு அவனது தேவை இருக்கின்றது. எனவே, பிரபஞ்சத்தின் எஜமானனாக இருக்கும் அந்த இறைவன் முன்பு குனிய வேண்டும் என அடியானுக்கு அல்லாஹ் கவனமூட்டுகின்றான்.

நான் தற்போது ஓதிய வசனத்திலும் அல்லாஹ் தமது இறைவனுக்கு மறைவாக அஞ்சும் மக்களை எச்சரிக்கும்படி கவனமூட்டுகின்றான். அந்த அச்சத்தின் விளைவாக அவர்கள் தொழுகையை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். பிறகு அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தின் காரணமாக தனது நஃப்ஸை தூய்மையாக்குவதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். அல்லாஹ்வுக்கு முன்பாக ஒவ்வொருவரும் தனது செயல்களுடன் செல்ல வேண்டியது வரும். எவ்வளவு நெருக்கமானவராக இருந்தாலும் அல்லாஹ்வின் முன்னிலையில் அவர் யாருக்கும் உதவி செய்ய முடியாது. உங்களுக்கு நெருக்கமானவராக ஒருவர் இருந்தாலும்கூட எவரும் பிறரது சுமையை சுமக்க முடியாது என்று அல்லாஹ் கூறிவிட்டு அதற்கு அடுத்தபடியாக இறைவனுக்கு மறைவாக அஞ்சுவது பற்றியும், தொழுகை பற்றியும், நஃப்ஸைத் தூய்மையாக்குவது பற்றியும், இறுதியில் அல்லாஹ்விடமே நீங்கள் திரும்பி வர வேண்டியதுள்ளது என்பதைப் பற்றியும் அல்லாஹ் கூறியிருப்பது பலவீனமான நமக்கு கவனமூட்டுவதற்கேயாகும். அதாவது, மறுமை பற்றிய அச்சம் எப்போதும் உங்களுக்கு இருந்து வர வேண்டும். அல்லாஹ் தீர்ப்பு நாளின் எஜமானனாக இருக்கின்றான். அவனிடமே நாம் திரும்பிச் செல்ல வேண்டியதுள்ளது என்ற எண்ணமிருந்தால் பிறகு நஃப்ஸை தூய்மையாக்குவது பற்றியும் நமக்கு எண்ணமிருக்கும். நஃப்ஸை தூய்மையடைய செய்வதற்கு மிகவும் சிறந்த வழி தொழுகையை நிலைநாட்டுவதாகும். தொழுகையை நிலைநாட்டுபவர்களுக்குத் தான் மறைவானவற்றின் மீதும் வலுவான நம்பிக்கை இருக்கும். மறைவாக அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்களின் தக்வாவின் தரம்தான் மிகவும் உயர்வான நிலையில் இருக்கும். தனது நெருக்கமானவர் தன்னிடம் வெறுப்படைந்து விடக் கூடாதே என்று அஞ்சுவது போல அல்லாஹ்வும் தன்னிடம் வெறுப்படைந்து விடக்கூடாதே என்று ஒருவருக்கு அச்சம் வரும்போதுதான் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பில் வளர்ச்சி ஏற்படும். அல்லாஹ் மீதுள்ள அன்பு அதிகமாகும் போது அவன் மீதுள்ள அச்சமும் அதிகமாகும். அதன் காரணமாக நற்செய்திகளை செய்வதன் பக்கம் கவனம் ஏற்படும்.

யூனுஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மக்களது செயல்கள் தொடர்பாக கியாமத் நாளன்று எல்லாவற்றையும் விட முதலாவதாக தொழுகை பற்றிய கணக்கே கேட்கப்படும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நமது மகிமைக்குரிய இறைவன் மலக்குகளிடம் இவ்வாறு கேட்பான். ஆனால் தான் கேட்பதைப் பற்றி எல்லாரையும் விட நன்றாக அவனுக்குத் தெரியும். அல்லாஹ் மலக்குகளிடம் எனது அடியானின் தொழுகைகளை பாருங்கள். அவன் அவற்றை முழுமையாக நிறைவேற்றியுள்ளானா? அல்லது அதை முழுமையாக நிறைவேற்றாமல் அவன் விட்டுவிட்டானா? என்று கேட்பான். அவனது தொழுகைகள் முழுமையாக, சரியாக நிறைவேற்றப்பட்டு இருந்தால் அவனது செயல்களின் பதிவேட்டில் அவை முழுமையான தொழுகைகள் என்று எழுதப்படும். அவனது ஃபர்ளான தொழுகைகளில் ஏதேனும் குறை இருந்தால் எனது அடியான் நஃபிலான இறைவணக்கங்களை செய்துள்ளானா என்று பாருங்கள் என அல்லாஹ் மலக்குகளிடம் கேட்பான். அவ்வாறு அடியான் நஃபிலான இறைவணக்கங்களை செய்திருந்தால் எனது அடியானின் ஃபர்ளான தொழுகைகளில் உள்ள குறைவை அவனது நஃபிலான இறைவணக்கங்கள் மூலம் நிறைவடையச் செய்யுங்கள் என அல்லாஹ் மலக்குகளிடம் கூறுவான். பிறகு எல்லா செயல்களும் இதே முறையில் கணக்கில் எடுக்கப்படும்.

எனவே, மரணத்திற்கு பிறகு மனிதன் முதலாவதாக கடந்து செல்ல வேண்டிய சோதனை தொழுகைகள் தொடர்புடையதாக இருக்கும்போது எந்த அளவு அது தொடர்பாக அவன் தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும்? அல்லாஹ் தனது அடியார்களுக்கு கருணை காட்டும் வகையில் தனது அடியானின் உபரியான நன்மைகளை அவனது கடமையாக்கப்பட்ட செயல்களின் தட்டில் போடும்படி உத்தரவிடுகின்றான். அதன் மூலம் கடமையாக்கப்பட்டவற்றில் உள்ள குறைகள் நிறைவு செய்யப்படுகின்றது. எனவே, ஏதாவதொரு சமயத்தில் நான் எனது ஃபர்ளான தொழுகைகளை சரியாக நிறைவேற்றாமல் இருந்திருப்பேன் என்று நினைத்து நஃபிலான இறைவணக்கங்கள் பக்கம் கவனம் செலுத்துவதுதான் ஒரு நம்பிக்கையாளரின் உயர்ந்த தரமாகும். ஏனென்றால், மனிதன் பலவீனமானவனாக இருக்கின்றான். எனவே, பலவீனம் வெளிப்படும்போது அல்லாஹ்வின் கருணையின் பார்வை நம்மீது விழ வேண்டும். இதுதான் மறைவாக இறைவனுக்கு அஞ்சுவது என்பதன் பொருள். ஏனென்றால், நஃபிலான இறைவணக்கங்களில் ஈடுபடும்போதுதான் ஒரு அடியான் தனிமையில் இருக்கும் நிலையில் இறைவன் முன்னிலையில் ஆஜராகின்றான். யாரும் அவனை காண்பதில்லை. இவ்வாறு, மறைவாக இருக்கும் நிலையில் அவன் இறைவனுக்கு அஞ்சுகின்றான்.

**தொழுகை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

தொழுகை ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாக இருக்கின்றது. ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் தொழாமல் இருக்க அனுமதி தாருங்கள். ஏனென்றால், நாங்கள் பல்வேறு வேலைகளில் ஈடுபடுபவர்களாக இருக்கின்றோம். விலங்குகளை பராமரிப்பதன் காரணமாக எங்கள் ஆடைகள் தூய்மையாக இருக்கின்றதா? இல்லையா? என்று எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு ஒய்வும் இல்லை என்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாருங்கள்! தொழுகை இல்லையென்றால் வேறு என்னதான் இருக்கின்றது. தொழுகை இல்லாமல் மார்க்கமேயில்லை என்று கூறினார்கள்.

தொழுகை என்றால் என்ன? தனது பணிவையும், தனது கோரிக்கை களையும், தனது பலவீனங்களையும் இறைவன் முன்னிலையில் எடுத்து வைத்து தனது தேவைகளை நிறைவேற்றும்படி அவனிடம் கூறுவதுதான் தொழுகையாகும். சில நேரத்தில் அவனது மகிமையை கருத்தில் கொண்டு அவனது கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக மனிதன் அவன் முன்னால் கைகட்டி நிற்கின்றான். சில நேரங்களில் முழுமையான பணிவுடனும், தாழ்மையுடனும் அவன் முன்னால் சஜ்தாவில் வீழ்கின்றான். அவனிடமே தனது தேவைகளை கேட்கின்றான். இதுவே தொழுகையாகும். ஒரு பிச்சைக்காரனைப் போன்று தான் பிச்சை கேட்கும் நபரைப் பற்றி நீ இந்த இந்த சிறப்புத் தன்மைகளைப் பெற்றவன் என்று புகழ்வது போன்று இறைவனைப் புகழ்கின்றான். அதன் மூலம் அவனது மகிமையையும் வல்லமையையும் கருத்தில் கொண்டு அவனது கருணையைத் தூண்டுகின்றான். பிறகு அவனிடத்தில் தனது தேவைகளைக் கேட்கின்றான்.

எனவே, இப்படிப்பட்ட விஷயங்கள் ஒரு மார்க்கத்தில் இல்லையென்றால், அது என்ன மார்க்கம்? மனிதன் எப்போதும் தேவையுடையவனாக இருக்கின்றான். எனவே, அவன் இறைவனிடம் அவனது திருப்தியைப் பெறும் வழிகளை எப்போதும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அவனது அருளை அவனிடமிருந்தே பெற விரும்ப வேண்டும். ஏனென்றால், அவன் தருகின்ற நல்வாய்ப்புகள் மூலமாகத்தான் எதையாவது செய்ய முடியும். அல்லாஹ்வே! உனது திருப்தியைப் பெறும் பணிகளை செய்து உன்னை திருப்திப்படுத்துவதற்கான நற்பாக்கியத்தை நீ எங்களுக்கு வழங்குவாயாக! இறைவன் மீதுள்ள அன்பு அவன் மீதுள்ள அச்சம், அவனது நினைவு உள்ளத்தில் எப்போதும் இருப்பதற்கே தொழுகை என்று பெயர். இதுவே மார்க்கமாகும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர்கள் தொழுகையிலிருந்து ஓய்வு பெற விரும்புகின்றார்களோ அவர் விலங்குகள் செய்வதை விட அதிகமாக வேறு என்னதான் செய்துள்ளார்? விலங்குகள் போன்றே உண்பதும், குடிப்பதும், தூங்குவதும் அவரது வேலையாக இருந்தால் இது ஒருபோதும் மார்க்கமாகாது. இது காஃபிர்களின் வாழ்க்கையாகும். எந்த நொடியில் ஒருவன் இறைவனிடமிருந்து கவனமற்றவனாகி விடுகின்றானோ அந்த நொடியில் அவன் காஃபிராகி விடுகின்றான் என்ற விஷயம் முற்றிலும் உண்மையானதும் சரியானதுமாகும்.

எனவே, தொழுகைகளை முறையாக பாதுகாப்பதில் கவனம் செலுத்துவது தான் ஒரு நம்பிக்கையாளருக்கும் ஒரு நிராகரிப்பாளருக்கும் இடையில் அவர்களைப் பிரித்துக் காட்டும் விஷயமாக இருக்கின்றது. இறைவணக்கத்தை நிறைவேற்றாவிட்டால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பதைப் போன்று மனிதனுக்கும் விலங்கிற்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்க முடியும்?

மூஃமின் அல்லாதவர்களின் தீமைகளை பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறும்போது மூஃமின்கள் அப்படிப்பட்ட தீமைகளிலிருந்தும் தூய்மையானவர்கள் என அல்லாஹ் கூறுவதற்குக் காரணம் அவர்கள் தொழுகைகளை நிறைவேற்றுவதாலேயேயாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: ***இல்லல் முஸல்லீன் அல்லதீனஹும் அலா ஸலாதிஹிம் தாயிமூன்*** - ஆம்! தொழுகையை நிறைவேற்றுபவர்களின் நிலையே தனிப்பட்டதுதான். அவர்கள் தங்கள் தொழுகையை நிரந்தரமாக தொடர்ச்சியாக நிறைவேற்றி வருவார்கள். (70:23,24)

அல்லாஹ் இவ்வாறு கூறக்காரணம் உலக விஷயங்களும், உலக பணிகளும் இப்படிப்பட்டவர் களுக்கு தடையாக இருக்காது. நல்லொழுக்கத்தின் உயர்வான தரத்திலுள்ள இவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வர். மறுமை நாளைப் பற்றிய அச்சமும் இறைதண்டனை பற்றிய அச்சமும் அவர்களுக்கு இருக்கும். இது உண்மையான மூஃமின்களின் அடையாளமாகும். இப்படிப் பட்டவர்களது தொழுகையே ஏற்றுக் கொள்ளப்படும்.

சிலர் பிறருக்கு காட்டுவதற்காக தொழக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

***ஃப வய்லுன் லில் முஸல்லீன். அல்லதீனஹும் அன் ஸலாத்திஹிம் ஸாஹூன். அல்லதீனஹும் யுராஹூ(வ்)ன்*** - தங்களது தொழுகைகளில் கவனமற்ற நிலையில் இருப்பவருக்கும் பிறருக்குக் காட்டுவதற்காக தொழும் மக்கள் மீதும் அழிவுதான். (107:5,6,7,8)

இந்த வசனத்தில் இரண்டு விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தொழும் நிலையில் கவனமற்றவர்களாக இருப்பவர்களுக்கு அழிவுதான். இரண்டாவது அவர்கள் பிறருக்கு காட்டுவதற்காக தொழுகின்றார்கள்.

சமுதாயத்தின் தாக்கத்தால் சிலர் தொழுகின்றார்கள். இறைவனுக்காக அவர்கள் தொழுவதில்லை. மக்களுக்கு காட்டுவதற்காக தொழுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களிடம் ஒழுக்கரீதியிலான சில தீமைகளும் இருக்கும். அதன் பக்கம் அவர்கள் கவனம் செலுத்தமாட்டார்கள். ஆனால், நல்லொழுக்கம் சிறந்த நிலையில் இருப்பது தொழுகையாளியின் அடையாளமாக இருக்கின்றது.

சஹாபாக்களின் நிலை இவ்வாறானதாக இருக்கவில்லை. எனவே, இந்த வசனங்களில் பின்னால் வரப்போகின்றவர்களுக்கு எச்சரிக்கை இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் நயவஞ்சகர்கள்தான் பிறரை ஏறமாற்றக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பற்றி அல்லாஹ் ***வஇதா காமூ இலஸ்ஸலாத்தி காமூ குஸாலா*** - அவர்கள் தொழுகைக்காக செல்ல எழுந்து நிற்கும்போது சேம்பேறித்தனத்துடன் எழுந்து நிற்பார்கள் (4:143) என்று கூறியுள்ளான். மேலும் அவர்களிடம் ஒழுக்கரீதியிலான தீமைகளும் இருக்கும். அவ்வாறே இந்த இறுதி காலத்திலுள்ள முஸ்லிம்களின் நிலை பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறும்போது, ***மஸாஜிதுஹும் ஆமிரத்துன் வஹிய ஹராபுன் மினல் ஹுதா*** - அதாவது அந்த காலத்திலுள்ள மக்களின் பள்ளிவாயில்கள் வெளிப்படையாக பார்க்கும்போது நிரம்பியிருக்கும். ஆனால் அவை நேர்வழியிலிருந்தும் காலியாக இருக்கும் என்று கூறியுள்ளார்கள்.

எனவே, நேர்வழியிலிருந்தும் காலியாக இருக்கின்ற இந்த பள்ளிவாயில் -களில் தொழும் மக்கள் மீதுதான் அவர்களது தொழுகைகளே சாபமாக விழுகின்றது. ஆனால், நாமோ முன்னவர்களுடன் இணையும் நற்பேறு பெற்ற ஆஹரீன்களாக (பின்னவர்களாக) இருக்கின்றோம். எவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்களோ எவர்களைப் பற்றி அல்லாஹ்வும் அவர்கள் முன்னோர்களுடன் இணைந்து விட்டார்கள் என்று கூறியுள்ளானோ அவர்களாக நாம் இருக்கின்றோம். இத்தகு மகத்தான அருட்கொடை நமக்கு கிடைத்திருக்கும்போது நமக்கு எத்தகைய மகத்தான பொறுப்பு இருக்கின்றது. எனவே, உங்களது தொழுகைகளில் ஒருபோதும் சோம்பலை வரவிடாதீர்கள்.

நமது தொழுகைகள் முழுக்க முழுக்க இறைவனுக்காக ஆகிவிட்டால்தான் நாமும் இறைவன் விடுத்துள்ள எச்சரிக்கையிலிருந்து தப்புபவர்களாக இருப்போம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதன் கருத்தை புரிந்த பிறகு தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இது தொடர்பாக திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அத்தொடர் ***வய்லுல் லில் முஸல்லீன் அல்லதீனஹும் ஸலாத்திஹிம் ஸாஹூ(வ்)ன்*** - தொழுகையாளிகளுக்கு நாசம்தான். அதாவது, எந்த தொழுகையாளிகள் தொழுகையின் உண்மை நிலையை புரியாதவர்களாக இருக்கின்றார்களோ அந்த தொழுகையாளிகளுக்கு நாசம் தான் என்று கூறப்பட்டிருக்கின்றது. மனிதன் உருக்கத்துடனும் விருப்பத்துடனும் இறைவனிடம் வேண்டுவதே தொழுகை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலமாக இறைவனது சந்திப்பு அவனுக்குக் கிடைக்க வேண்டும்.

ஏனென்றால், எதுவரை இறைவன் ஒருவரை தூய்மையாக்குவதில்லையோ அவரை எவரும் தூய்மையாக்க முடியாது. எதுவரை அல்லாஹ் தன்னை சந்திக்கும் வழியை ஒருவருக்கு திறந்து காட்ட மாட்டானோ அதுவரை எவரும் அவனது சந்திப்பை பெற முடியாது. பல்வேறு அரிகண்டங்களும், பலவகையான சங்கிலிகளும் மனிதனின் கழுத்தில் மாட்டப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து விலகுவதற்கு அவன் பலமுறை முயற்சி செய்கிறான். ஆனால் அவை விலகுவதில்லை. தான் தூய்மையடைய வேண்டும் என்று அவன் விரும்பிய பிறகும் கூட நஃப்ஸே லவ்வாமா (குற்றஞ்சாட்டும் ஆன்மா) வின் தடுமாற்றங்கள் வந்து விடுகின்றன. மனிதனை பாவங்களிலிருந்து தூய்மையாக்குவது இறைவனின் பணியாகும். அவனைத் தவிர மிகுந்த வலிமையுடன் உங்களை தூய்மையாக்குகின்ற வேறு எந்த ஆற்றலும் இல்லை. தூய உணர்வுகளை உருவாக்குவதற்காக இறைவன் தொழுகையை வைத்துள்ளான்.

தொழுகை என்றால் என்ன? அது வேதனையுடனும் உருக்கத்துடனும் மன்றாடி வேண்டுவதன் மூலம் இறைவனுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதே ஆகும். அதன் மூலமாக தீய எண்ணங்கள் விலகி விடும். இறைவனுடன் தூய அன்பும், தூய தொடர்பும் அதன் மூலமாகவே கிடைக்கும். மேலும் இறைவனது கட்டளைகளுக்கேற்ப செயல்படும் நற்பாக்கியம் கிடைக்கும். வெறும் சொல்லளவில் மட்டுமல்லாமல் அத்துடன் உருக்கமும் வேதனையும் எரிகின்ற தன்மை ஆகியவற்றுடன் கூடிய நிலைக்கே ஸலாத் என்ற சொல் பொருந்துகிறது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: ***கத் அஃப்லஹல் மூஃமினூன அல்லதீனஹும் ஃபீ ஸலாத்திஹிம் காஷிஊன்*** - நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் தங்கள் தொழுகைகளில் பணிவை மேற்கொள்வார்கள். (23:2,3)

இந்த வசனங்களுக்கு பிறகு அல்லாஹ் வெற்றி பெறுகின்ற நம்பிக்கையாளர்களின் பல்வேறு சிறப்புத் தன்மைகளை விளக்கிக் கூறியுள்ளான். ஆனால், எல்லாவற்றையும் விட முதலாவது விஷயமாக அந்த நம்பிக்கையாளர்கள் முற்றிலும் இறைவனுக்காக மிகுந்த பணிவுடன் தொழுகையை கடைபிடிப்பவர்களாக இருப்பார்கள் என்று கூறியுள்ளான். உலகம் மறுமை ஆகிய இரண்டிலும் அருள்களைப் பெற்று வெற்றியின் ஏணிப்படியில் ஏறுவதற்கான முதல் நிபந்தனை, தங்களது தொழுகைகளை முழுக்க முழுக்க இறைவனுக்காக மட்டும் தொழுவதாகும். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தையும் அவனது அன்பையும் பெறுவதற்கும் அதில் வளர்ச்சியடைந்து அதன் மூலம் இறை திருப்தியைப் பெறுவதற்காகவும் இந்த தொழுகைகள் தொழப்பட வேண்டும். இதுவே ஒரு மனிதனின் வாழ்வின் நோக்கமாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு மூஃமினின் ஆன்மீக பிறப்பிற்கான முதல் தகுதி தொழுகையிலும் அல்லாஹ்வை நினைவு கூர்வதிலும் உருக்கமும், மனதை ஒருநிலைப்படுத்தும் நிலையும், வேதனையின் தன்மையும் ஏற்படுவதேயாகும். அவரது ஆன்மாவும் பணிவால் உடைந்து விடுகிறது. ஒரு வெப்பமும், துடிப்பும்,

வேதனையும், மன்றாடும் நிலையும் அவரிடம் ஏற்படுகிறது. இத்தகைய நிலையை தன்னிடம் உருவாக்கி ஒரு அச்சத்தின் நிலையை தன்னகத்தே உருவாக்கி மகிமையுள்ள வல்லமைமிக்க இறைவன் முன்னால் உள்ளத்தை குனியும்படி செய்ய வேண்டும். இதனையே கத் அஃப்லஹல் முஃமினூன். அல்லதீனஹும் ஃபி ஸலாத்திஹிம் முஃமினூன். அல்லதீனஹும் ஃபி ஸலாத்திஹிம் காஷிஊன் - அதாவது எந்த நம்பிக்கையாளர்கள் தனது தொழுகையிலும் இறைவனை நினைவு கூரும் எல்லாவகை வழிமுறைகளிலும் பணிவையும் தாழ்மையையும் கடைபிடித்து உருக்கத்துடனும் வேதனையுடனும் மன்றாடும் நிலையுடனும் உள்ளத்தால் இறைவனை நினைவு கூர்வதில் ஈடுபடுகின்றார்களோ அவர்களே தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். இந்த பணிவும் உருக்கமும் ஏற்படுவதுதான் ஆன்மீகப் பிறப்பிற்கான முதல் தகுதியாகும். அல்லது இறைவனை வணங்குதல் என்ற பூமியில் முதலாவது விதைக்கப்படும் விதை என்று இதை நாம் கூறலாம். ஐந்து வேளை தொழப்படும் தொழுகைகளிலும் இதுதான் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. மனிதன் மன இச்சைகளிலிருந்தும் எண்ணங்களிலிருந்தும் தன் தொழுகையைப் பாதுகாப்பாக வைக்கவில்லையென்றால் அது உண்மையான தொழுகையாக இருக்க முடியாது.

தொழுகை என்பது குனிந்து நிமிருதல், சம்பிரதாயத்தினாலும் பழக்கத்தினாலும் நிறைவேற்றுதல் என்பதற்குப் பெயரல்ல. தொழுகை என்பது உள்ளத்தாலும் உணரப்பட வேண்டும். ஆன்மா உருகி பயந்தவாறு இறைவனின் முன்னிலையில் விழ வேண்டும். இயன்றவரை உருக்கத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும், மனதிலுள்ள பெருமை, பாவம் ஆகியவை விலக வேண்டும் என மன்றாடி துஆ செய்ய வேண்டும். இந்த மாதிரியான தொழுகை அருளுக்குரியதாக இருக்கிறது. இந்த நிலைமையில் அவர் உறுதியாக நிலை நின்றால் இரவில் அல்லது பகலில் ஓர் ஒளி அவருடைய உள்ளத்தில் இறங்கியதை அவர் பார்ப்பார். பிறகு நஃப்ஸே அம்மாரா (பாவம் செய்யக் கட்டளையிடும் ஆன்மா) வின் பெருமை குறைந்து விட்டது என உணர்வார். பாம்பில் ஒரு விஷம் இருப்பதுபோன்று நஃப்ஸே அம்மாராவிலும் விஷம் இருக்கிறது. அதை படைத்தவனிடமே அதற்குரிய சிகிச்சையும் இருக்கிறது.

பணிவுடனும், தாழ்மையுடனும் அல்லாஹ்வின் முன்னிலையில் வீழ்வதும் அதில் உறுதியாக நிலைநிற்பதும் ஒரு நேரம் தொழுது இன்னொரு நேரம் தொழாமல் இருக்கும் நிலையில்லாமல் தொடர்ந்து முழுமையான பணிவுடனும் உருக்கத்துடனும் தொழுகையை நிறைவேற்றி வந்தால், தீமைகளைத் தூண்டுகின்ற உணர்வுகள் ஒரு நாள் அழிந்து விடும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏனென்றால், தீமைகளை அழிப்பதற்கும் இறைவன் பக்கம் குனிவது அவசியமாகும்.

**பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:**

**வஃமுர் அஹ்லக பிஸ்ஸலாத்தி வஸ்தபிர் அலைஹா. லா நஸ்அலுக ரிஸ்கா. நஹ்னு நர்ஸுகுக வல் ஆகிபத்து லித்தக்வா** - உங்கள் வீட்டிலுள்ளவர் களுக்கு தொழுகை தொடர்பாக போதித்து வருவீராக. மேலும் அதில் எப்போதும் உறுதியாக நிலைத்திருப்பீராக. நாம் உம்மிடம் எந்த விதமான ரிஸ்கையும் (உணவிற்கான வழிவகைகளையும்) கேட்கவில்லை. நாமே உமக்கு ரிஸ்க் வழங்குகின்றோம். இறையச்சத்தின் மூலமே நல்ல முடிவு ஏற்படும். (20:133)

தாமும் தொழுது தனது வீட்டிலுள்ளவர்களுக்கும் தொழுகை தொடர்பாகக் கவனமூட்டும்படி கூறிய அல்லாஹ் இது உங்களது நன்மைக்குரிய செயலாகும்; இந்த உலகிலும் இதன் கனிகளை நீங்கள் பெறுவீர்கள்; மறுமை நாளிலும் இறையச்சம் உள்ளவர்தான் வெற்றி பெறக்கூடியவர் என்று கூறுகின்றான். இந்த உலகிலும் இறையச்சத்தை மேற்கொள்பவர்களுக்கு அல்லாஹ் எந்தெந்த வழிகளிலெல்லாம் ரிஸ்கை வழங்குகிறான் என்றால் அவற்றை அந்த இறையச்சமுள்ள மனிதரால் சிந்தித்துப் பார்க்கக் கூட முடியாது. எனவே, அல்லாஹ் தொழுகைகளை கடமையாக்கியதன் மூலம் உங்கள் மீது எந்த வரியையும் திணிக்கவில்லை. மாறாக தனது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் மனிதனுக்கு இதன் மூலமாக

அவன் அருட்கொடைகளை வழங்குகின்றான். உலகிலும் பரிசுகளைப் பெற மனிதன் முயற்சி செய்கின்றான். அவ்வாறிருக்கும்போது ஆன்மீக அருட்கொடைகளைப் பெறுவதற்கு அவன் ஏன் முயற்சி செய்யக் கூடாது?

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகையில் மனிதன் நிற்கும்போது இறைவனைப் புகழ்கின்றான். புகழ்வதற்கேற்ற சரியான நிலை, நிற்பதுதான் என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும். அரசர்களைப் புகழ்ந்து கஸீதாக்கள் (கவிதைகள்) பாடப்படும்போது அதனைப் படிப்பவர் நின்ற நிலையில்தான் அதைப் படிக்கின்றார். தொழுகையிலும் வெளிப்படையான முறையில் கியாம் அதாவது நிற்பது வைக்கப்பட்டுள்ளது. ஆன்மீகமான முறையிலும் அல்லாஹ்வின் முன்பு நிற்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். ஒரு விஷயத்தில் நிலைத்து நின்றவாறே ஹம்து (இறைவனைப் புகழ்தல்) செய்யப்படுகின்றது. ஒருவர் சாட்சி கூறுபவராக இருக்கும் நிலையில் எவரையாவது புகழ்கின்றார் என்றால் அவர் தமது கருத்தில் நிற்கின்றார்.

அதாவது ஒரு கருத்தில் உறுதியாக நிலைத்து நிற்கும்போதுதான் ஒருவரைப் பற்றி சாட்சி கூறுவதிலும் அவரைப் புகழ்வதிலும் மனிதன் ஈடுபட முடியும். தொடர்ந்து **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுபவர் புகழின் எல்லா வகைகளும் அல்லாஹ்வுக்கே உரியன என்பதை உறுதியாக நம்பும்போதுதான் அவர் உண்மையிலேயே அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுகிறார். இந்த விஷயம் தெளிவான முறையில் உள்ளத்தில் உருவாகி விட்டால் அதுதான் ஆன்மீகமான கியாம் (அதாவது நிற்றல்) ஆகும். ஏனென்றால், உள்ளமும் அதில் நிலைபெற்று விடுகிறது. மேலும் அவர் நிற்பதாகக் கருதப்படுகிறது. அவரது நிலைக்கேற்ப அவர் நிற்கின்றார். அதன் மூலமாக அவருக்கு ஆன்மீக நிற்றலும் கிடைக்க வேண்டும்.

பிறகு தொழுகையில் ருகூவில் செல்லும் போது அவர் சுப்ஹான ரப்பியல் அளீம் என்று கூறுகிறார். ஒருவரது மகத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் போது அவர் முன்பு குனிவது அவரது மகிமை எதிர்பார்ப்பதேயாகும். எனவே, நாவால் ***சுப்ஹான ரப்பியல் அளீம்*** (மகத்தான என் இறைவன் தூயவன்) என கூறும்போது அவரது நிலை குனிந்திருப்பது காட்டப்பட்டுள்ளது.

அதாவது அல்லாஹ்வின் மகிமையை நாவால் எடுத்துக் கூறும்போது வெளிப்படையான நிலைமையில் அவன் முன்பு குனிந்தவாறும் அதனைத் தொழக் கூடியவர் வெளிப்படுத்துகின்றார்.

மூன்றாவது கூற்று, ***சுப்ஹான ரப்பியல் அ.்.லா*** என்பதாகும். ***அ.்.லா*** என்றால் எல்லாவற்றையும் விட உயர்ந்தவன் என்று பொருள். இது ஸஜ்தாவை எதிர்பார்க்கின்றது. நாவால் அல்லாஹ் எல்லாவற்றையும் விட மிகவும் உயர்ந்தவன் என்று கூறும்போது வெளிப்படையாக செயலிலும் மனிதன் அந்த உயர்ந்தவன் முன்பாக தன்னை ஸஜ்தாவில் வீழ்த்தி விடுகின்றான்.

எனவே, தொழுகையிலுள்ள மூன்று கூற்றுகளுடன் உடலளவிலான செயல்களும் செய்யப்படுகின்றன. அதாவது எல்லா வகையான நிற்றலையும் மனிதன் கடைபிடிக்கின்றான். உடலில் ஒரு துண்டாக இருக்கும் நாவும் அதை கடைபிடித்தது. நாவும் உடலும் இவ்விஷயத்தில் இணைந்து விட்டன. இதை தவிர மூன்றாவது ஒன்றும் இருக்கின்றது. அது கலந்து கொள்ளவில்லையென்றால் தொழுகை நிறைவேறாது. அது என்ன? அது உள்ளமாகும். எனவே, உள்ளம் நிற்பதும் அவசியமாகும். உண்மையில் அவர் இறைவனைப் புகழ்வதுடன் ஆன்மீகமாக நிற்கவும் செய்கின்றாரா என்பதை அல்லாஹ் அவரது உள்ளம் மூலமே அறிகின்றான். எனவே, அவரது உடல் நிற்பதுபோலவே அவரது ஆன்மாவும் நிற்க வேண்டும்.

***சுப்ஹான ரப்பியல் அளீம்*** என்று கூறும்போது அவர் இறைவனது மகிமையை மட்டும் ஏற்றுக் கொள்வதுடன் மட்டுமல்லாமல் இறைவன் முன்னிலையில் அவர் குனிந்துள்ளாரா என்பதையும் அவர் பார்க்க வேண்டும். அந்த வெளிப்படையான குனிதலுடன் அவரது ஆன்மாவும் குனிந்து விட வேண்டும்.

மூன்றாவதாக, இறை இருப்பின் மிக உயர்ந்த நிலையை அறிந்து மனிதன் ஸஜ்தாவில் வீழ்கின்றான். அத்துடன் இறைவன் முன்னிலையில் அவனது ஆன்மாவும் வீழ்ந்து விட்டதா என்பதை அவன் கவனிக்க வேண்டும். அதாவது, நாவும் சொற்களைக் கூறுகின்றது. உடலும் ஸஜ்தாவில் வீழ்ந்திருக்கின்றது. உள்ளத்தின் நிலையும் அவ்வாறே இருக்கின்றது. அதாவது, நான் அல்லாஹ் முன்பு முற்றிலும் வீழ்ந்து விட்டேன் என்பதை உள்ளமும் உணர்கின்றது.

சுருக்கமாக, இப்படிப்பட்ட நிலைமை உருவாகாதவரை நாம் நிம்மதியாக இருக்கக் கூடாது. ஏனென்றால், ***யுகீமூனஸ் ஸலாத்த*** (அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள்) என்பதன் பொருள் இதுவேயாகும்.

எனவே இந்த மூன்று நிலைமைகளையும் தன்னிடம் உருவாக்குவது ஒவ்வொரு நம்பிக்கையாளரது பணியாக இருக்கின்றது. நாவு கூறுவதை உடலும் தனது செயலில் வெளிப்படுத்திக் காட்டுவதுடன் உள்ளமும் அதனை உணர வேண்டும். அந்த உணர்வும் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால் அதன் உண்மை நிலையை இறைவனும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இந்த நிலைமை உருவாகவில்லையென்றால் அது ஏற்படும் வரை நிம்மதியாக இருக்கக் கூடாது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும், ***யுகீமூனஸ் ஸலாத்த*** (அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள்) என்பதற்கு இதுதான் பொருள் என்றும் அவர்கள் கூறி விட்டார்கள்.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த நிலைமைகள் எவ்வாறு உருவாகும் என்ற கேள்வி கேட்கப்பட்டால் தொழுகையை நிலைபெறச் செய்து நிரந்தரமாக தொடர்ந்து நிறைவேற்றுவதன் மூலமாகவே அது ஏற்படும் என்பதே இதற்குரிய விடையாகும். மேலும் இது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களினாலும் சலனங்களினாலும் ஒருவர் கவலை அடையக் கூடாது. துவக்க சமயத்தில் சந்தேகங்களுடனும் சலனங்களுடனும் ஒரு போர் கண்டிப்பாக நடக்கும். சோர்வடையாமல் இவ்விஷயத்தில் பொறுமையுடன் உறுதியாக நிலைநிற்பதுதான் இதற்குரிய சிகிச்சையாகும். மேலும் இறைவனிடம் இதற்காக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். இறுதியில் நான் குறிப்பிட்ட அந்த நிலைமை உருவாகி விடும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகையை விட சிறந்த வழிமுறை வேறு எதுவுமேயில்லை. ஏனென்றால் இதில் இறைவனைப் புகழ்வது இருக்கின்றது. இஸ்திக்ஃபார் (இறைவனிடம் தனது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்பது) இருக்கின்றது. மேலும் தரூது ஓதுங்கள். (ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலாவத்தும் ஸலாமும் ஓதுதல்) இருக்கின்றது. எனவே, எல்லா விதமான சிறந்த ஆன்மீக வழிமுறைகளின் தொகுப்பு இந்த தொழுகையேயாகும்.

எனவே இந்த வழிமுறைகள்தான் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அடையாளத்தை நமக்குக் காட்டுபவையாக உள்ளன.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதன் மூலமாக எல்லா விதமான துக்கங்களும் துயரங்களும் விலகி விடும். கடினமான நிலைமைக்கு தீர்வு ஏற்பட்டு விடும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சிறிதளவு துக்கம் ஏற்பட்டாலும் கூட அவர்கள் தொழுவதற்காக நின்று விடுவார்கள். எனவேதான் அல்லாஹ் ***அலா பி***

**திக்ரில்லாஹி தத்ம இன்னல் குலூப்** என்று கூறியுள்ளான். உள்ளங்கள் நிம்மதியைப் பெறுவதற்கும் ஆறுதல் அடைவதற்கும் தொழுகையை விட சிறந்த வழிமுறை வேறு எதுவும் இல்லை.

இந்த உயர்வான தரத்தை நாம் பெற வேண்டும். நமது உடலில் ஒவ்வொரு அணுக்களும் நமது ஆன்மாவும் அவன் முன்னால் குனிய வேண்டும். நம்மை இறைவனுக்கு நெருக்கமானவர்களாக ஆக்கும்விதத்திலுள்ள துஆக்கள் நமது நெஞ்சங்களிலிருந்து கொதித்து எழட்டுமாக. ஏக இறைவனது திருப்தி மட்டும் வெளிப்படும் வகையிலுள்ள புரட்சியை காணக்கூடியவர்களாக நம்மில் ஒவ்வொருவரையும் அல்லாஹ் ஆக்குவானாக! ஆமீன்.


| KUTHBA<br>*HAZRAT KHALIFATHUL MASIH V*<br>AT BAITHUL FUTUH , LONDON<br>ON 22.02.08 | TRANSLATED BY : M . RAFEEQ AHMAD<br>PUBLISHED BY: MAJLIS KHUDDAMUL AHMADIYYA - MELAPALAYAM,<br>*Asura East Street, Melapalayam,*<br>*Tirunelveli - 627 005.*<br>*Telefax : 0462 - 2352456* |
|---|---|